RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-4 இதழ்- 317 நவம்பர்.17 2025 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

## நவ.19ல் பிரதமர் மோடி கோவை வருகை: விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு



கோவை: நவ.17-

பிரதமர் நரேந்திர மோடி கோவை வருகையை முன்னிட்டு கோவை விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கோவையில் இயற்கை வேளாண் மாநாடு நவம்பர் 19,20 ம் தேதிகளில் நடக்கிறது. நவம்பர் 19ம் தேதி நடைபெறும் நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார். இதையொட்டி விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து கோவை விமான நிலைய நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பாதுகாப்பு காரணங்களுக்காக பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு கோவை விமான நிலையத்தில் தற்காலிகமாக சில கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி விமான நிலைய வளாக நுழைவாயில் முன் நவம்பர் 18ம் தேதி காலை 6 மணி முதல் நவம்பர் 19ம் தேதி மாலை 6 மணி வரை வாகனங்களை நிறுத்த முற்றிலும் தடை விதிக்கப்படுகிறது.

நுழைவாயில் பகுதியில் பயணிகளை இறக்கி விடவும், ஏற்றிச் செல்லவும் மூன்று நிமிடங்கள் வழங்கப்படும் கால அவகாசம் வழக்கம் போல் நடைமுறையில் இருக்கும். பாதுகாப்பு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவும், நவம்பர் 18, 19ம் தேதிகளில் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள பயணிகள் மேற்குறிப்பிட்ட புதிய கட்டுப்பாடுகளை பின்பற்றவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை விமான நிலைய இயக்குநர்(பொறுப்பு) சம்பத் குமார் கூறும் போது, பிரதமர் வருகை மற்றும் உளவுத்துறை அறிவுறுத்தலின் பேரில் கோவை விமான நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பயணிகளுக்கு வழக்கமாக மேற்கொள்ளப்படும் சோதனை தவிர அனைவரும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு ஒரு சிலருக்கு இரண்டு அல்லது மூன்று முறை சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பயணிகள் மட்டுமின்றி விமான நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள், விமான நிறுவனத்தினர் உள்ளிட்ட அனைத்து துறையினரும் விமான நிலையத்திற்குள் மட்டுமின்றி வெளியே அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மத்திய தொழிற்பாதுகாப்பு படையினர் அதிதீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர்.என்றார்.

## பிஹார் தேர்தல் முடிவை விமர்சன கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும்” கமல்ஹாசன் எம்.பி



பிஹார், நவ17-

பிஹார் தேர்தல் முடிவை விமர்சனக் கண்ணோட்டத்தோடுதான் பார்க்க வேண்டும் என மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் எம்பி நேற்று தெரிவித்தார்.

சென்னையில் இருந்து கொடைக்கானல் செல்ல, மதுரை விமான நிலையத்துக்கு நேற்று வந்த கமல்ஹாசன் எம்பி செய்தியாளர்களிடம் கூறியதாவது: பிஹார் தேர்தல் முடிவுகளை விமர்சனக் கண்ணோட்டத்தில்தான் பார்க்க வேண்டும். தமிழகம் கவனமாகவும், விழிப்போடும் இருக்க வேண்டும். மேகேதாட்டு அணை பிரச்சினை நான் சிறு வயதாக இருந்தபோதிருந்தே நடந்து கொண்டிருக்கிறது. தற்போது எனது தாடியின் நிறமே மாறி விட்டது. ஆனால், தண்ணீர் கருப்பாகவும், தாடி வெள்ளையாகவும் மாற ஆரம்பித்து விட்டது.

புதிதாக கட்சி தொடங்குபவர்களின் குறிக்கோள் உயர்ந்ததாக இருக்க வேண்டும். உதாரணத்துக்கு நடிப்பதாக இருந்தால்கூட இருப்பதிலேயே, தன் பிள்ளை சிறந்த நடிகராக வேண்டும் என்றுதான் யாரும் நினைப்பார்கள். ஏழையாக இருப்பவர்கள் கூட, தனது பிள்ளையை கொஞ்சும்போது மகராஜனே.. என்றுதான் கொஞ்சுவர். ஆசை எல்லோருக்கும் இருக்கும். என்று கூறினார்.

2026 சட்டப்பேரவை தேர்தலில் திமுகவுக்கும் தவெகவுக்கும் இடையேதான் போட்டி என்று விஜய் கூறுவதாக செய்தியாளர்கள் எழுபபிய கேள்விக்கு அவர் பதில் அளிக்கும்போது, எங்களது பார்வைதானே; ஒட்டு அவர்களுடையது (மக்களுடையது), என்றார்.

## கடந்த 30 ஆண்டுகளில் முதல்முறை மாநிலங்களவை எம்.பி.க்களை இழக்கும் ஆர்ஜேடி



புதுடெல்லி, நவ.17-

பிஹார் தேர்தல் தோல்வியை அடுத்து, வரும் 2030ம் ஆண்டுக்குள் மாநிலங்களவையில் ஒரு எம்.பி. கூட இல்லாத கட்சியாக ராஷ்டிரிய ஜனதா தளம் மாறப் போகிறது.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் என்டிஏ (ஐஜத பாஜக) கூட்டணி அமோக வெற்றி பெற்றது. மெகா கூட்டணி (ராஷ்டிரிய ஜனதா தளம் காங்கிரஸ்) படுதோல்வி அடைந்தது. இதில் ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) 25 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

இந்த தோல்வி மாநிலங்களவை தேர்தலில் ஆர்ஜேடிக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்த உள்ளது. வரும் 2030ம் ஆண்டு பிஹாரில் அடுத்த சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். அதற்கு முன்னதாக தற்போது ஆர்ஜேடி கட்சியில் உள்ள 5 மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக் காலமும் முடிந்துவிடும். அதன்பிறகு 30 ஆண்டு கட்சி வரலாற்றில் மாநிலங்களவையில் ஒரு எம்.பி.கூட இல்லாத கட்சியாக ஆர்ஜேடி மாறும்.

5 எம்.பி.க்கள்: ஆர்ஜேடியில் தற்போது மாநிலங்களவை எம்.பி.க்களாக உள்ள பிரேம் சந்த் குப்தா (ஆர்ஜேடி மாநிலங்களவை தலைவர்), ஏ.டி.சிங் ஆகியோரின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முடிகிறது. பையாஸ் அகமதுவின் பதவிக்காலம் 2028ம் ஆண்டு ஜூலையில் முடிகிறது. மனோஜ் குமார் ஜா, சஞ்சய் யாதவ் ஆகிய இருவரின் பதவிக் காலம் 2030ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிகிறது.

அடுத்த 2026ம் ஆண்டு பிஹாரில் காலியாகும் 5 மாநிலங்களவை எம்.பி. பதவிக்கு தேர்தல் நடைபெறும். அப்போது ஆர்ஜேடி 2, ஐஜத 2, ராஷ்டிரிய லோக் மோர்ச்சா 1 என 5 இடங்களுக்கு தேர்தல் நடைபெறும். இந்த 5 இடங்களுமே என்டிஏ கூட்டணிக்கு செல்லும். இதன் மூலம் மாநிலங்களவையில் என்டிஏ கூட்டணி பலம் பெறும்.

அதேபோல், வரும் 2028ம் ஆண்டு பாஜக.வில் 3, ஐஜத மற்றும் ஆர்ஜேடி.யில் தலா ஒருவரின் மாநிலங்களவை எம்.பி. பதவிக் காலம் முடிகிறது. இந்த 5 இடங்களும் கூட என்டிஏ கூட்டணிக்கே செல்லும்.

ஒவைசி ஆதரவு: பிஹார் தேர்தலில் அசாதுதீன் ஒவைசியின் ஏஐஎம்ஐஎம் கட்சி 5 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்தக் கட்சி வரும் 2030ம் ஆண்டு நடைபெறும் மாநிலங்களவை தேர்தலில் ஒருவேளை ஆதரவளித்தால் ஒரு இடத்தில் மட்டும் ஆர்ஜேடி.க்கு மாநிலங்களவை எம்.பி. பதவி கிடைக்கும்.

ஆனால், அதற்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது. ஏனெனில், பிஹார் தேர்தலில் கூட்டணியில் சேர விரும்பிய ஒவைசியை தேஜஸ்வி தவிர்த்துவிட்டார். இதனால் ஒவைசியின் ஆதரவு கிடைப்பது கடினம்.

## பிஹாரில் 11 ஆக குறைந்த முஸ்லிம் எம்எல்ஏக்கள்



புதுடெல்லி, நவ.17-

பிஹாரில் முஸ்லிம்கள் சுமார் 20 சதவிகிதம் பேர் உள்ளனர். அதன்படி 45 எம்எல்ஏக்கள் இருக்க வேண்டும். ஆனால், இந்த முறை 11 முஸ்லிம்கள் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர். சீமாஞ்சல் பகுதியில் முஸ்லிம் வாக்காளர்கள் அதிகம். இங்கு அசாதுதீன் ஒவைசியின் ஏஐஎம்ஐஎம் கட்சி 5 தொகுதிகளை மீண்டும் பெற்றுள்ளது.

மேலும், இதர பல பகுதிகளில் எதிர்க்கட்சிகளின் மெகா கூட்டணிக்கான முஸ்லிம் வாக்குகளையும் ஒவைசி கட்சி பிரித்துள்ளது. ஏஐஎம்ஐஎம் கட்சியில் 2020 தேர்தலில் வெற்றி பெற்ற 5 எம்எல்ஏ.க்களில் 4 பேர் ஆர்ஜேடியில் இணைந்தனர். அவர்கள் இந்த தேர்தலில் அதே தொகுதிகளில் போட்டியிட்டனர். எனினும், வேறு புதிய முஸ்லிம் வேட்பாளர்களுக்கு ஏஐஎம்ஐஎம் வாய்ப்பளித்து வெற்றி பெற வைத்துள்ளது.

தற்போது ஆர்ஜேடி 3, காங்கிரஸ் 2 மற்றும் ஐஜத.வில் ஒருவர் வெற்றி பெற்று எம்எல்ஏ.க்களாகி உள்ளனர். கடந்த 1985 தேர்தலில் 34 முஸ்லிம்கள் எம்எல்ஏ.க்களானார்கள். அந்த நேரத்தில் ஜார்க்கண்ட் மாநிலம் பிரிக்கப்படாமல் ஒன்றுபட்ட பிஹாரில் 324 தொகுதிகள் இருந்தன. கடைசியாக நடைபெற்ற 2020 தேர்தலிலும் 19 முஸ்லிம்கள் எம்எல்ஏக்களாக இருந்தனர். ஆனால், தற்போது இது 11 ஆக குறைந்துள்ளது.

இந்த தேர்தலில் முஸ்லிம்களுக்கு பாஜக வாய்ப்பளிக்கவில்லை. இதன் கூட்டணி கட்சியான சிராக் பாஸ்வானின் லோக் ஜனசக்தியில் முஸ்லிம்கள் போட்டியிட்டும் வெற்றி பெறவில்லை.

## பிஹார் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு பெரும் தோல்வி ஏன்?



புதுடெல்லி:, நவ.17-

புதுடெல்லி: பிஹார் தேர்தலில் மொத்தமுள்ள 243 தொகுதிகளில் ஆளும் என்டிஏ கூட்டணி 202 இடங்களை பெற்றுள்ளது. அதேசமயம் ஆர்ஜேடி தலைமையிலான மெகா கூட்டணி 35 ஆக சுருங்கி விட்டது. ஆர்ஜேடி 25 இடங்களை மட்டுமே பெற்றது.

இதில் முக்கிய ஆதரவாளர்களான யாதவ் மற்றும் முஸ்லிம்கள் எதிர்க்கட்சிகளுக்கு வாக்களிக்காதது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் முக்கிய நடவடிக்கையான எஸ்ஐஆர் (வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்) முதல் மாநிலமாக பிஹாரில் அமலானது.

இது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பிஹாரில் வாக்காளர் அதிகார யாத்திரை நடத்தினார். இதன் உச்சமாக மெகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி யாதவ் அறிவிக்கப்பட்டார். இவை எதுவுமே மெகா கூட்டணிக்கு பலன் அளிக்கவில்லை.

இதன் பின்னணியில் சில முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன. இதில் ஒன்றாக மெகா கூட்டணியில் தொடக்கம் முதலாகவே நம்பிக்கையின்மை நிலவியது. தனது தந்தை லாலுவுக்கு பிறகு மெகா கூட்டணிக்கு தேஜஸ்வி தலைமை தாங்க விரும்பினார். இவருக்கு பின் இருக்கையில் அமர காங்கிரஸ் விரும்பவில்லை. யாத்திரையில் கலந்துகொண்ட அனைத்து கட்சிகளும் தேஜஸ்வியை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொண்ட போதிலும் ராகுல் மட்டும் மவுனம் காத்தார்.

இதனிடையே இடதுசாரிகளும், விகாஸ் இன்சான் கட்சி (விஐபி) தலைவர் முகேஷ் சாஹ்னியும் வெளிப்படையாக அதிக தொகுதிகள் கோரினர். இப்பிரச்சினையை பேசித் தீர்க்க பெரிய எதிர்பார்ப்புடன் டெல்லி சென்ற தேஜஸ்விக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இவரை சந்திப்பதை ராகுல் தவிர்த்துவிட்டதாக தகவல் வெளியானது. இறுதியில் வேறு வழியின்றி கட்டாயத்தின் பேரில் முதல்வர் வேட்பாளராக தேஜஸ்வி அறிவிக்கப்பட்டார். இதுவும் மெகா கூட்டணியின் ஒரு முக்கியப் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

அதேபோல் விஐபி கட்சித் தலைவர் முகேஷ் சாஹ்னியை துணை முதல்வர் வேட்பாளராக அறிவித்ததும் பெரிய தவறாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இந்த அறிவிப்பு ஆளும் என்டிஏவால் ஏற்கெனவே தீவிரமாக முன்னிறுத்தப்பட்டு வந்த மகா தலித் சமூகத்தை அந்நியப்படுத்தியது. மேலும், மெகா கூட்டணி ஆட்சி அமைந்தால் மற்றொரு துணை முதல்வர் உண்டு என்றவர்கள் அவரது பெயரை அறிவிக்கவில்லை. இது பிஹாரில் சுமார் 20 சதவீதம் உள்ள முஸ்லிம்களை கோபப்படுத்தியது. இதுவும் முஸ்லிம் பகுதியில் மெகா கூட்டணியின் பலவீனமான பிரச்சாரமும் இழப்பை ஏற்படுத்திவிட்டது. வழக்கமாக முஸ்லிம்களின் வாக்குகளை பிரிக்கும் ஒவைசி இந்த முறை மெகா கூட்டணியில் இணைய விரும்பினார். ஆனால், மெகா கூட்டணி அவரை புறக்கணித்தது. இதன் விளைவும் தேர்தல் முடிவுகளில் வெளிப்படையாகத் தெரிகிறது.பாஜக போட்டியிட்ட 101 தொகுதிகளில் 12ல் தோல்வி அடைந்தது. இந்த 12ல் 5 தொகுதிகளை ஏஐஎம்ஐஎம் கட்சியிடம் பாஜக இழந்துள்ளது.

பிஹாரின் முக்கியத் எதிர்கட்சித் தலைவரான தேஜஸ்வியுடன் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி மேடை ஏறினாலும் அது ஏனோ பெரிதாகச் சிறக்கவில்லை. ககரியா பிரச்சாரத்தின் போது ராகுல், அத்தொகுதி மீனவர்களுடன் தண்ணீரில் குதித்து மீன் பிடித்ததற்கும் உரிய வாக்குகள் கிடைக்காதது போலானது. கடந்த 2004 முதல் 20 ஆண்டுகளாக ராகுல் அரசியலில் உள்ளார். அவரது இந்த அனுபவத்திற்கு 55 வயதில் இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான சாகசங்கள் தேவையில்லை என இப்போது விமர்சிக்கப்படுகிறது.

தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சியாலும் ராகுலுக்கு அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது. பிரியங்கா காந்தியின் பிரச்சாரமும் எடுபடவில்லை. 20 வருடங்களாக தொடரும் என்டிஏ ஆட்சிக்கு எதிரான வாக்குகள் தமக்கு நிச்சயம் வெற்றித் தரும் என்ற மெகா கூட்டணியின் கணிப்பு தவறாகப் போனது. இப்போது பிஹாரின் வெற்றியால் தமிழ்நாடு மற்றும் கேரளாவுக்கும் பாஜக சவால் விடுகிறது.

## மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் கட்டியதில் முறைகேடு: பழனிசாமிக்கு எதிராக சிபிஐ விசாரணை கோரி வழக்கு



சென்னை:, நவ.17-

சென்னை: கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் 11 மாவட்டங்களில் புதிதாக மருத்துவக் கல்லூரிகளுடன் கூடிய மருத்துவ மனைகள் கட்டப்பட்டதில் முறைகேடு நடந்துள்ளதாகக் கூறி முன்னாள் முதல்வர் பழனிசாமிக்கு எதிராக சிபிஐ விசாரணை கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதுதொடர்பாக திருவாரூர் மாவட்டம் நன்னிலம் தாலுகா முடிகொண்டானைச் சேர்ந்த என்.ராஜசேகரன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு: கடந்த அதிமுக ஆட்சியில் ராமநாதபுரம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், அரியலூர், நாகப்பட்டினம், விருதுநகர், திருப்பூர், கிருஷ்ணகிரி, நீலகிரி, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்களில் புதிதாக மருத்துவக்கல்லூரிகளுடன் கூடிய மருத்துவமனைகள் கட்டப்பட்டன. இதைக் கட்ட மத்திய அரசு 60 சதவீதம், மாநில அரசு 40 சதவீதம் நிதி வழங்கியுள்ளன.

முன்னாள் முதல்வரும், முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சருமான பழனிசாமியின் பதவிக்காலத்தில் தான் இந்த மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டன. ஆனால் இவை கட்டப்பட்டதில் தேசிய மருத்துவ ஆணைய விதிகள் அப்பட்டமாக மீறப்பட்டு மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கிய கோடிக்கணக்கான தொகை தவறாக பயன்படுத்தப்பட்டு, முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்த முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரிக்கக் கோரி லஞ்ச ஒழிப்புத் துறையிடம் கடந்த 2021 ஜூலை 7ல் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை. அதையடுத்து கடந்த 2022ல் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த வழக்கில் எனது புகார் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணை நடந்து வருவதாக தமிழக அரசு தெரிவித்ததையடுத்து வழக்கை முடித்து வைத்து நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த முறைகேடு தொடர்பாக முன்னாள் முதல்வரான பழனிசாமிக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து விசாரிக்க சிபிஐக்கு உத்தரவிட வேண்டும்.

அதேபோல கடந்த 2023ம் ஆண்டு மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல் தமிழகத்தில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து சிபிஐ நேரடியாக வழக்குப்பதிவு செய்து விசாரிக்கலாம் என்ற அனுமதியை தமிழக அரசு வாபஸ்பெற்றது. இந்த அரசாணையை ரத்து செய்ய வேண்டும்.

# “திருமணம் ஆன 13 நாளிலே தீக்குளித்து பழனியைச் சேர்ந்த வாலிபர் சாவு குடும்ப தகராறு மூலனூரில் சோகமாக முடிந்தது”

தாராபுரம், நவ.17-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே திருமணம் நடந்தது கடந்த 13 நாட்களிலே. ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. குடும்ப தகராறு, மது போதையில் தீக்குளித்து கொண்ட வாலிபர் உயிரிழந்த சம்பவம் தாராபுரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



மூலனூர் டீச்சர்ஸ் காலனியைச் சேர்ந்த பானுப்பிரியா (29), முன்பே திருமணம் ஆனவர். கணவரை, கணவர் இறந்த நிலையில் ஏழு வயது மகனுடன் தனியாக வாழ்ந்து வந்தார். மூலனூரிலுள்ள எஸ்.டி கொரியர் நிறுவனத்தில் வேலை செய்துவரும் அவர், திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் பாளையம் அடிவாரத்தைச் சேர்ந்த கௌதம் (31) என்பவரை காதலித்து வந்தார். கௌதம், மூலனூரில் உள்ள காத்தாடி நிறுவனமான ஸ்பிரிங் எனர்ஜி நிறுவனத்தின் ஒப்பந்த அடிப்படையில் உள்ள அக்ஷயா என்ற துணை நிறுவனத்தின் பிட்டராக வேலை வேலை செய்து வருகிறார்.

இருவரும் காதலித்து வந்த நிலையில், கடந்த 3.ஆம் தேதி அன்று திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள குழந்தை வேலப்பர் கோவிலில் திருமணம் நடைபெற்றது.

திருமணத்திற்குப் பின்னர், பானுப்பிரியா செல்போனில் பேசுவது பிடிக்காமல், “உடனே செல்போனை மாற்றிவிடு” என்று அடிக்கடி கூறி வந்ததாக தெரிகிறது. மேலும், மது அருந்தும் பழக்கமுள்ள கௌதம் தினமும் மது போதையில் மனைவியுடன் தகராறு செய்து வந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நேற்று இரவு 8.30 மணியளவில், மது அருந்திவிட்டு வந்த கௌதம், மூலனூரில் உள்ள பானு ப்பிரியாவின் வீட்டிற்கு சென்று இனிமேல் நான் சண்டை போட மாட்டேன் வா இரண்டு பேரும் சேர்ந்து வாழ்வோம் என தெரிவித்ததாகவும் ஆனால் காதலித்தபோது என்னை அன்பே செல்லமே என கூறிவிட்டு திருமணம் முடிந்த 13 நாட்களில் போன் நம்பரை மாற்று யாரிடமும் பேசாதே என்னை சந்தேகப்படும் படியான வார்த்தைகளால் நீ என்னை திட்டுவது எனக்கு பிடிக்கவில்லை மற்றும் நீ மது அருந்த மாட்டேன் என தெரிவித்தாய் ஆனால் தினமும் மது குடிக்கிறாய் இந்த மது குடிக்கும் யாரையும் எனக்கு பிடிக்காது எனவே நீ திருந்தி நல்லவனாக நான் உன்னுடன் வாழ்கிறேன் என தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் பானுப்பிரியாவுடன் ஏற்பட்ட கடுமையான தகராறின் போது, தன்னிடம் இருந்த பெட்ரோல் பாட்டிலில் உள்ள பெட்ரோலை தனது உடலில் ஊற்றி, “நான் தீக்குளிக்கப் போகிறேன்” என மிரட்டியுள்ளார். அதனுடன், தீப்பெட்டியை எடுத்து, உரசியபோது உடலில் தீப்பற்றியதாக கூறப்படுகிறது.

தீப்பற்றிய கௌதமை மீட்டு அக்கம் பக்கத்தினர் உடனடியாக தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், அங்கு வழங்கப்பட்ட சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக, மூலனூர் காவல் நிலைய ஆய்வாளர் விவேகானந்தன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விஜய் மக்கள் சந்திப்பு விரைவில் நடைபெறும்: தவெக துணை பொதுச் செயலாளர் தகவல்

திருச்சி, நவ.17-

“விஜய்யின் மக்கள் சந்திப்பு பயணம் விரைவில் தொடங்க உள்ளது. அனைத்து அணிகளையும் வலுப்படுத்தி, வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி மக்கள் சந்திப்பு நடக்கும்” என்று தவெக துணை பொதுச் செயலாளர் ராஜ் மோகன் தெரிவித்துள்ளார்.




தமிழகத்தில் கடந்த நவ.4 முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணி (எஸ்ஐஆர்) நடைபெற்று வருகிறது. இதில் பல்வேறு குளறுபடிகள் நடந்து வருவதாக திமுக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ. ஆர்) குளறுபடிகளை கண்டித்து தமிழகம் முழுவதும் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது.

திருச்சி மாவட்ட ஒருங்கிணைந்த தவெக சார்பில் மலைக்கோட்டை, சறுக்குபாறை பகுதியில் இன்று மதியம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு தவெக துணைப் பொதுச்செயலாளரும், கொள்கை பரப்பு இணைச் செயலாளருமான ராஜ் மோகன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர்கள் திருச்சி மாநகர் சந்திரா, புறநகர் வடக்கு ஜெகன் மோகன், புறநகர் மேற்கு ரவிசங்கர், புறநகர் கிழக்கு லால்குடி விக்னேஷ், கிழக்கு தொகுதி கரிகாலன், திருவெறும்பூர் தொகுதி அருள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் செந்தில், மகளிரணி துளசி, வடக்கு மாவட்ட துணை செயலாளர் எஸ்.எஸ்.சிவா, சுந்தர், கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர், ராஜ்மோகன் செய்தியாளர்களிடம் கூறியது: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை கண்டித்து இன்று மலைக்கோட்டையில் எழுப்பிய கோஷங்கள் செயின்ட் ஜார்ஜ் மற்றும் செங்கோட்டைகளில் எதிரொலிக்கும். 3 அடிக்கு மேல் மேடை போடக்கூடாது என்றனர். பவளவிழா நடத்தியவர்கள் 15 அடிக்கு மேடை அமைத்தார்கள். இதைத் தான் திமுக தலைமை விரும்புகிறார்கள். அனுமதி வாங்கி நடக்கும் கூட்டத்துக்கு கட்சியினரை வரவிடாமல் அலைக்கழித்தனர்.

விஜய்யின் மக்கள் சந்திப்பு பயணம் விரைவில் தொடங்க உள்ளது. இது தொடர்பாக நிர்வாகக் குழுவிலிருந்து, அனைத்து அணிகளையும் வலுப்படுத்தி, எஸ்ஓபி ஆணைகளை பின்பற்றி மக்கள் சந்திப்பு நடக்கும்.” என்றார்.

விஜய் ஏன் எந்த போராட்டத்திலும் பங்கேற்கவில்லை எனக் கேட்டபோது, “விஜய்யின் போராட்ட வடிவம் என்பது பாமரனுக்கும் புரியும் வகையில் இருக்கும். அவர் பதிவிட்ட 10 நிமிட காணொலியால் தேர்தல் ஆணைய சர்வரே முடங்கும் அளவுக்கு ஏராளமானோர் அதை பார்வையிட்டுள்ளனர். அவர் பேசியதன் விளைவே பெரிய பேசுபொருளாக மாறி உள்ளது.

தமிழகத்தில் 29 வயதுக்குட்பட்ட இளம் வாக்காளர்கள் 1.50 கோடி பேர் உள்ளனர். வரும் தேர்தலில் இளம் வாக்காளர்களின் அன்பை வெல்லக்கூடியது புதிய அரசியல் கட்சியினர் தான். இதையடுத்தே அதிதீவிரமாக எஸ்.ஐ.ஆரை மத்திய அரசு கொண்டு வந்தது. இதில் மத்திய அரசுக்கு மறைமுகமாக நட்புறவாக இங்குள்ள மாநில அரசு செயல்படுகிறது.

சட்டப்பேரவையில் தீர்மானம் கூட போடவில்லை. எஸ்ஐஆரை வைத்து பிஹாரில் ஒரு தேர்தலையே முடித்துவிட்டனர். அந்த முடிவு தந்த அதிர்ச்சியிலிருந்து யாரும் மீளவில்லை. அதுபோன்ற சூழல் தமிழகத்தில் ஏற்படக்கூடாது. அதன் நீட்சி தான் விஜய் வெளியிட்ட காணொலி.

இன்று தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெற்றுள்ளது. அடுத்தடுத்த நாளில் அவர் வெளியில் வரத்தான் போகிறார்.. பேசப்போகிறார். அவர் பேசும் ஒவ்வொரு பேச்சும் தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றப் போகிறது. எஸ்ஐஆர் படிவங்களை பிஎல்ஓக்கள் தந்தாலும், திமுக பிரமுகர்கள் பெறுகின்றனர். கட்சி பேதங்களைத் தாண்டி வாக்குரிமையை பாதுகாக்க தேர்தலை நேர்மையாக நடத்துவதை ஆணையம் உறுதி செய்ய வேண்டும்.” என்றார்.



# குழந்தைகள் தினத்தை முன்னிட்டு 28 மாணவர்கள் தொடர்ந்து 20 நிமிடம் யோகா செய்து குளோபல் புக் ஆப் யோகா ரெக்கார்ட்ஸில் புதிய சாதனை படைத்துள்ளனர்

சென்னை, நவ.17-

சென்னை மடிப்பாக்கத்தில் உள்ள டி.எம்.எஸ்.யோகா அகடாமியில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடம் யோகா குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்

புதிய உலகசாதனை நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இதில் யோகாவிற்கென மட்டுமே உருவாக்கப்பட்ட உலகளாவிய சாதனைப் பதிவு தளம் Global Book of Yoga Records சார்பில், யோகா உலக சாதனை முயற்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் 28 குழந்தைகள் கர்ப்பாசனம் (Garbhasana) நிலையில் அதிக நேரம் தங்கி சாதனை படைக்கும் முயற்சியை மேற்கொண்டனர். இதன் நோக்கம் யோகாவின் மூலம் இயற்கை பிரசவம் (Normal Delivery) குறித்த விழிப்புணர்வை சமூகத்தில் உருவாக்கும் வகையில் நடந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு யோகாசங்களை செய்து அசத்தினர்.

சுமார் 20 நிமிடம் இடைவிடாது யோகா செய்த மாணவர்கள் குளோபல் புக் ஆப் யோகா ரெக்கார்ட்ஸில் தங்களது சாதனைகளை பதிவு செய்துகொண்டனர்.

சாதனை படைத்த மாணவர்களுக்கு குளோபல் புக் ஆப் யோகா ரெக்கார்ட்ஸ் நிறுவனர் கணேஷ் சாதனை சான்றிதழ், பதக்கம், கோப்பை வழங்கி பாராட்டினார்.



# ஜனநாயக முறையில் தேர்தல் நடப்பதை தேர்தல் ஆணையம்தான் உறுதி செய்ய வேண்டும்: பிரேமலதா

மதுரை, நவ.17-

எஸ்ஐஆர் மீது தேர்தல் ஆணையம் தான் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும் என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா கூறினார்

மதுரையில் நடைபெறும் பூத் கமிட்டி கூட்டத்தில் பங்கேற்பதற்காக சென்னையில் இருந்து தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விமானம் மூலம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) மதுரை வந்தார் விமான நிலையத்தில் அவர் செய்தியாளரிடம் கூறுகையில், “இன்று மூன்றாம் கட்ட சுற்றுப்பயணம் மதுரையிலிருந்து ஆரம்பித்து.. டிசம்பர் 2ம் தேதி ஈரோட்டில் நிறைவு பெறுகிறது.

தமிழகத்துக்கு வர வேண்டிய முதலீடு ஆந்திராவுக்கு சென்றதை நான் கவலையுடன் தான் பார்க்கிறேன். இது போன்ற திட்டங்கள் எல்லாம் இங்கு வரவேண்டும். அப்போதுதான் நிறைய இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற முடியும். இதற்கு உரியவர்கள் பதில் சொல்ல வேண்டும். வருங்காலத்தில் பெரிய திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு வருவதை உறுதி செய்ய வேண்டும் என்பது தான் தேமுதிகவின் நிலைப்பாடு..

தேர்தலில் பல ஆண்டுகளாக முறைகேடு நடைபெறுகிறது. தேர்தல் ஆணையம்தான் உறுதியாக நிலைப்பாடை எடுத்து. ஜனநாயக நாட்டில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடப்பதை உறுதி செய்ய வேண்டும். தவெக எஸ்ஐஆர்க்கு எதிராக போராடுமா என்பது பற்றி நான் இப்போது கருத்து சொல்ல விரும்பவில்லை. மேலும், 2026ல் யாருடன் கூட்டணி என்பது குறித்து கடலூர் மாநாட்டில் முடிவெடுக்கப்படும்.

தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு கொடுப்பதால் மட்டுமே அவர்களது தேவை பூர்த்தி ஆகாது. அவர்களது தேவையை அரசு பூர்த்தி செய்ய வேண்டும்.” என்றார்.

# மானாமதுரையில் தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் மாரத்தான் போட்டி

மானாமதுரை, நவ.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ஹார்ட்ஃபுல்னெஸ் தியான அமைப்பும் செர்டு தொண்டு நிறுவனமும் இணைந்து 16.11.25 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு மானாமதுரை யூனியன் அலுவலகத்திருந்து மாரத்தான போட்டி நடைபெற்றது. மாரத்தான் ஓட்ட பந்தயம் மானாமதுரை யூனியன் ஆபீஸ், தொடங்கி ஹார்ட் ஃபுல்நெஸ் தியான மையம், பீசர் பட்டினம் இறுதியாக சென்றடைந்தனர்

கிரின் ஹாட் ஃபுல்னெஸ் ரன் அமைப்பின் சார்பில் இந்தியா முழுவதும் 125 மையங்களிலும் தமிழ்நாட்டில் 15 மையங்களிலும் நடைபெற்றது. இப்போட்டியினை முன்னாள் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினரும் மானாமதுரை நகர் மன்ற தலைவர் S.மாரியப்பன் கென்னடி கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் ஹார்ட் ஃபுல் னெஸ் மண்டல ஒருங்கிணைப்பாளர் குமார், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன், மாவட்ட தொடர்பு ஒருங்கிணைப்பாளர் தமிழன்பன் ஆகியோர் உடனிருந்தனர்.








இந்நிகழ்வில் மானாமதுரை முழுவதும் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பசுமை மாரத்தானின் நோக்கம் கிரீன் ஹார்ட்ஃபுல்னெஸ் ரன் என்பது உடல் ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழல் மேம்பாட்டையும் அழகாக ஒருங்கிணைக்கும் பெரும் முயற்சி ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும் ‘பூமி’ பதிப்பில் (நிலைத்தன்மை, வளம், சகிப்புத்தன்மை), பசுமை நோக்கை மேலும் விரிவுபடுத்தும் வகையில் 50,000 மரங்கள் நடும் பெரும் இலக்குடன் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் டிஷர்ட் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

# ஆயக்குடியில் அதிமுக சார்பில் வாக்காளர் பட்டியல் ஆய்வு செய்யும் பணி

திண்டுக்கல், நவ.17-

திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆயக்குடி பேரூராட்சியில் உள்ள 29 வாக்களிக்கும் மையங்களுக்கு ஆயக்குடி அதிமுக பேரூர் கழக செயலாளர் வழக்கறிஞர் சசிகுமார் தலைமையில் கட்சி நிர்வாகிகள் ஒன்றாக இணைந்து அனைத்து வாக்களிக்கும் மையங்களுக்கு சென்று ஷிமிஸி எனப்படும் வாக்காளர்கள் படிவத்தை சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டனர். தொடர்ந்து அனைத்து வார்டுகளிலும் உள்ள வாக்களிக்கும் மையங் களில் வாக்காளர்களின் பெயர் பட்டியல்கள் சரியாக உள்ளதா? விடுபட்ட வாக்காளர்களை பட்டியலில் இணைப்பதற்கு படிவம் வழங்கப்படுகின்றதா? முறையாக அனைத்து வாக்காளர்களுக்கும் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றதா? உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் அதிமுக நிர்வாகிகளான அப்பாஸ் அலி ரகுபதி, கிருஷ்ணன், கலீல் ரகுமான் மோகன், தங்கவேல், தாமோதரன், கற்பகராஜ், குமார் தேவராஜ், விஜயகுமார், கதிர்வேல், ஷாஜகான், சபாபதி, திருமலைசாமி, காமராஜ், முருகன், கணபதி, மாரிமுத்து, சுப்பிரமணி, கணேசன், பால்ராஜ், அங்குசாமி, சபீக், உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு அனைத்து வாக்குச்சாவடி மையங்களுக்கும் சென்று ஆய்வு செய்தனர். தொடர்ந்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்கும் வகையில் விண்ணப்ப படிவங்கள் அனைவருக்கும் பாக முகவர்கள் சார்பாக வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்து வருகின்றனர்.

# வண்டலூர் கிரசண்ட் பல்கலைக்கழகத்தில் புற்றுநோய்க்கான மருந்துகளை உருவாக்குதல் மற்றும் உயிரி தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் குறித்து 2 நாள் சர்வதேச கருத்தரங்கு வெகு சிறப்பாக நடைப்பெற்றது

வண்டலூர், நவ.17-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் அமெரிக்காவின் வர்ஜீனியா பல்கலைக்கழகம் மற்றும் கிரசண்ட் பல்கலைக்கழகத்தில் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் - டெக்னாலஜி இணைந்து அடுத்த தலைமுறை கண்டுபிடிப்புகளுக்கான புற்றுநோய் உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்பத்தின் பங்குகள் குறித்து 5வது சர்வதேச மாநாடு நடைபெற்றது.



இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் இந்தியா முழுவதும் இருந்து பல்வேறு பொறியியல் கல்லூரியை சேர்ந்த மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.


நிகழ்ச்சியில் முதற்கட்டமாக புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் கல்வி சங்கத்தை (ACER) அறிமுகப்படுத்தினார். இதில் சிறப்பு விருந்தினராக அமெரிக்காவின் வர்ஜீனியா பல்கலைக்கழகத்தின் உயிரியல் மற்றும் உயிரி மருத்துவ பொறியியல் பேராசிரியர் டாக்டர் அம்மாசி பெரியசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கிற்கு பல்கலைகழக துணை வேந்தர் முருகேசன், பதிவாளர் ராஜா உசேன் ஆகியோர் தலைமை தலைமை தாங்கினர்.

கருத்தரங்கில் தற்போதைய ஆராய்ச்சியில் புற்றுநோய்க்கான மருந்துகளை உருவாக்குதல் மற்றும் உயிரி தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மூலம் நிலையான தீர்வுகளை வழங்குவது குறித்து விவாதித்தனர். மேலும் இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பல்வேறு ஆராய்ச்சி வல்லுநர்கள் தங்கள் ஆராய்ச்சிப் படைப்புகளை சமர்ப்பித்தனர். சிறந்த வழங்குநர்களுக்கு விருதுகளும், சிறந்த புதுமையான ஆராய்ச்சிகளுக்கு இளம் விஞ்ஞானி விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் துறை தலைவர் ஹேமலாதா, இணை பேராசியர் அசோக்குமார், நசீர் அகமது உள்ளிட்ட பேராசிரியர்கள்

# பத்மாவதி தாயாரை திருப்பதி ஏழுமலையான் திருமணம் செய்ய இது தான் காரணமா?



திருப்பதி ஏழுமலையான், பத்மாவதி தாயாரை திருமணம் செய்து கொண்டதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகிறது. இதற்கு ராமாயண தொடர்பம் இருப்பதாக புராணங்கள் சொல்கின்றன. ராமாயணத்தில் ராமராக இருந்து, அக்னி தேவனுக்கு அளித்த வாக்கை நிறைவேற்றுவதற்காகவே கலியுகத்தில் ஏழுமலையான் பத்மாவதி தாயாரை மணந்து கொண்டதாக சொல்லப்படுகிறது.

புராண காலத்தில் வேதவதி என்னும் பெண் நாராயணனை நேசித்ததுடன், அவரே தனக்கு கணவனாக வரவேண்டும் என்று விரும்பினாள். அவளுடைய அழகில் மயங்கி பல ராஜகுமாரர்கள் அவளை மணந்து கொள்ள முன் வந்த போதும், அவர்களையெல்லாம் பொருட்படுத்தாமல் நாராயணனையே மணந்து கொள்வது என்பதில் உறுதியாக இருந்த வேதவதி, நாராயணனை நோக்கி தவம் மேற்கொண்டாள். ஒரு முறை அந்த வழியாக வந்த ராவணன் வேதவதியைக் கண்டான். கண்டவுடனே காதல் கொண்டான். அவளுடைய அழகில் மயங்கி, அவளது அருகில் சென்று, அவளைப் பலவாறாக வர்ணிக்கத் தொடங்கினான். ராவணனின் வார்த்தைகள் வேத வதியின் தவத்தைக் கலைக்கவே, கண் திறந்துப் பார்த்தாள். ஆஜானுபாகுவாக அசுரன் ஒருவன் வேட்கையுடன் தன் அருகில் நிற்பதைப் பார்த்து மிகவும் பயந்து போய் விட்டாள். தனது பெருமைகளை கூறிய ராவணன், வேதவதியை மணக்க விரும்புவதாக தனது விருப்பத்தை தெரிவித்தான். ஆனால் தான் நாராயணனை மட்டுமே மணக்க உள்ளதாக கூறிய வேதவதியை தவறான நோக்கத்துடன் நெருங்கினான் ராவணன்.

அவனால் தனக்குக் கேடு விளையும் என்று எண்ணி மிகவும் கோபமான வேதவதி, "என் தவத்தைக் கலைத்து, என் விருப்பமில்லாமல், என்னை பலாத்காரம் செய்ய முன்வந்துவிட்டாயே! நான் வளர்த்திருக்கும் இந்த யாகத்தீயில் நானே விழுந்து சாம்பலாகிறேன். என்னைப் போன்ற ஒரு மங்கையால் நீயும், உன் குலமும் அழியும்" என்று சபித்து, நெருப்பில் விழுந்து சாம்பலாகிப் போனாள். சில ஆண்டுகளுக்குப் பின், ராவணன் சீதையை புஷ்பக விமானத்தில் கடத்திச் சென்றான். அச்சமயத்தில் ராவணன் முன்பாக அக்கினி பகவான் தோன்றினார். சீதையைக் காப்பாற்ற முடிவு செய்து, "ராவணா, நீ கடத்திக் கொண்டு போகும் சீதை, மாய சீதை. உண்மையான சீதையை ராமன் என்னிடம் ஒப்படைத்து உள்ளான். இந்த மாய சீதையை என்னிடம் விட்டுவிடு. உனக்கு உண்மையான சீதையை நான் தருகிறேன்" என்று கூறினான். அதை உண்மை என்று நம்பிய ராவணன், தன்னிடம் இருந்த சீதையை விட்டு விட்டான். அக்கினி பகவான் தன்னிடம் சாம்பலாகியிருந்த வேதவதியை பெண்ணுருவாக்கி ராவணனுக்குக் கொடுத்து, உண்மை சீதையை தனக்குள் மறைத்துக் கொண்டார். ராவணவதம் நடந்து முடிந்த பிறகு, சீதை அக்னிபிரவேசம் செய்து, தன் கற்பின் மகிமையை உணர்த்தினாள். அப்போது நெருப்பில் விழுந்தவள் உண்மையில் மாய சீதையான வேதவதி தான்.

ஆகையால், உண்மையான சீதையையும், வேதவதியையும் அக்கினி பகவான் ராமனிடம் ஒப்படைத்து, வேதவதியையும் திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டினார். அதற்கு, ராமபிரான் அக்கினி பகவானிடம், "நான் இந்த அவதாரத்தில் ஏகபத்தினி விரதன். ஒரு மங்கையைத் தான் மணந்து கொள்வேன். கலியுகத்தில், இந்த வேதவதியை நான் திருமணம் செய்து கொள்கிறேன்" எனக் கூறி வாக்களித்தார். இந்தக் காரணத்தினால் தான் வேதவதி பத்மாவதி என்ற பெயரில் ஆகாச ராஜனுக்கு மகளாகக் கிடைத்தாள். அதன் பிறகு தான் திருப்பதி ஏழுமலையான் சீனிவாசனாக வந்து பத்மாவதி தாயாரை மணம் புரிந்து, ராமாவதாரத்தில் தான் கொடுத்த வாக்கை க் காப்பாற்றினார்.

# தானங்கள் எத்தனை வகை? தானம் செய்ய முடியாதவர்கள் என்ன செய்தால் புண்ணியம் கிடைக்கும்?



தானம் செய்வது பாவங்களை போக்கி, புண்ணியங்களை தரக் கூடியதாகும். தானங்கள் எத்தனை வகை என சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் பற்றியும், மகத்தான தானங்களின் சிறப்புகளைப் பற்றியும், தானம் செய்ய வசதியற்றவர்கள் பணமின்றி புண்ணியம் பெறும் மாற்று வழிகள் பற்றியும் இங்கு தெரிந்து கொள்ளலாம்.

தான தர்மம் செய்வதால் புண்ணியம் கிடைக்கும் என நம் முன்னோர்கள் சொல்லுவதால், தானம் செய்வது என்பது வழிபாட்டில் மிக முக்கியமானதாகவும், முதன்மையான பரிகாரமாகவும் பார்க்கப்படுகிறது. பொதுவாக அன்னதானம், ஆடை தானம், கோ தானம், தண்ணீர் தானம், விளக்கு தானம் உள்ளிட்ட சில தானங்கள் தான் நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் தானங்களில் பல வகைகள் உண்டு என நம்முடைய சாஸ்திரங்கள் சொல்கின்றன. அவற்றில் முதன்மையான தானங்களாக மொத்தம் 32 வகையான தானங்கள் செய்ய வேண்டும் என்று வேதங்களும்,சைவ சித்தாந்தங்களும் தெரிவிக்கின்றன.

இதில் அன்னதானம், ஆடை தானம்,(சாதுக்களுக்கு காவி வேட்டியும்,துண்டும்;ஏழைகளுக்கு வேட்டி,சேலை,துண்டு,விரிப்பு) பழ தானம், ருத்ராட்ச தானம், பூ தானம்,(கோவில் பூஜைகள்,விழாக்களுக்குத் தேவையான பூக்களை தானம் செய்தல்) கோ தானம்(ஒருபோதும் ஜெர்ஸிப் பசுவை தானம் செய்யக் கூடாது. கன்னிகா தானம்(நம் மகளுக்கு நமது செலவில் திருமணம் செய்து வைப்பது/மகள் இல்லாதவர்கள் உறவினரின் மகளுடைய திருமண முயற்சிக்கு நேரடியாக உதவுவது), எண்ணெய் தானம்,(ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொருவிதமான எண்ணெய்கள் அபிஷேகம் செய்யத் தேவைப்படுகின்றன)

விருட்ச தானம்(கோவிலுக்குள் அல்லது கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் வில்வ மரம்,மா மரம்,வன்னி மரம்,வேப்ப மரம் போன்றவைகளை நட்டு மூன்று ஆண்டுகள் வரை பராமரிப்பது), விஷய தானம்( ஆன்மீக கருத்துகளை பரப்புவது), சொர்ண தானம்(ஏழைப்பெண்ணின் திருமணத்திற்கு தாலி செய்து கொடுப்பது அல்லது தெரிந்த கோவிலில் ஐம்பொன் சிலை / தங்கத்தால் சிலை செய்யும் போது தங்கப் பாளம் தானம் செய்வது;தங்க ரதம் செய்ய தங்கப் பாளம் தருவது), புண்ணியத்தை தானமாக பெறுவது( வில்லங்கம் இல்லாத உறவினர்களை காசி,கயா,கேதார்நாத்,பத்ரிநாத் போன்ற ஆலயங்களுக்கு நமது சொந்தச் செலவில் அழைத்துச் செல்வது), இது தவிர தண்ணீர் தானம், குடை தானம், காலணிகள் தானம், வென்னீர் தானம், பூமி தானம்(விவசாயத்திற்கு இலவசமாக இடம் தானம் செய்தல், ஏழைகளுக்கு இலவசமாக இடம் கொடுத்து அதில், அவர்கள் விரும்பும் விதமாக வீடு கட்டித் தருதல்), கல்வி தானம்( படிக்கும் ஏழை மாணவ,மாணவிகளுக்கு கட்டணம், கல்விக் கருவிகள், சீருடை தயார் செய்துதருதல்), ஊனமுற்றோர்களுக்கு வாகன தானம், கண் பார்வைக்குரிய கருவிகள் தானம். இந்த 19 தவிர இன்னும் 13 தானங்களும் உண்டு;

இவைகள் அனைத்தையும் செய்ய முடியாதவர்கள், அகத்திய மகரிஷி அருளிய பன்னிரு திருமுறைகளை ஓதி பாடல் பெற்ற ஸ்தலங்களில் குறைந்தது 3 ஆண்டுகள் மாதம் தோறும் அன்னதானம் செய்துவர வேண்டும். இப்படிச் செய்து வந்தால், 32 வகையான தானங்கள் செய்த புண்ணியம் மலையளவு திரண்டு வாழ்க்கையில் சகல சுகபோகங்களும் கிடைக்கும்; அப்படி அனைத்து சுகபோகங்களும் கிடைத்த பிறகு, மனம் உடல் சுகத்தைத் தேடி ஓடாமல் நின்றுவிடும்; உள் நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிடும்; அப்படி மனம் உள்நோக்கிச் செல்ல ஆரம்பித்தால், நமது மனம் நமது ஆத்மாவுடன் ஒன்ற ஆரம்பிக்கும்; நான் யார்? என்ற கேள்விக்கு விடை கிடைக்க ஆரம்பிக்கும்;நாம் எங்கிருந்து வந்தோம்? என்ற சூட்சுமம் புரிய ஆரம்பிக்கும்;இதற்குத்தான் ஆத்ம விசாரம் என்று பெயர்; இதன் அடுத்த நிலைகள் குரு மூலமாக உணர வேண்டியவை ஆகும்; சீடன் தயாராகும் போது குரு தோன்றுவார்.




# டி20 தொடரை 3-1 என வென்றது நியூஸிலாந்து

மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 5வது மற்றும் கடைசி டி20 ஆட்டத்தில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி தொடரை 31 என கைப்பற்றி கோப்பையை வென்றது.

டுனிடின் நகரில் நேற்று நடைபெற்ற 5வது டி20 கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்த மேற்கு இந்தியத் தீவுகள் அணி 18.4 ஓவர்களில் 140 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ராஸ்டன் சேஸ் 38, ரோமாரியோ ஷெப்பர்டு 36 ரன்கள் சேர்த்தனர். நியூஸிலாந்து அணி சார்பில் ஜேக்கப் ஃடபி 4, ஜேம்ஸ் நீஷம் 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

141 ரன்கள் இலக்குடன் பேட் செய்த நியூஸிலாந்து அணி 15.4 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி பெற்றது. டிம் ராபின்சன் 24 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 45 ரன்களும், ரச்சின் ரவீந்திரா 16 பந்தில் 21 ரன்களும் சேர்த்து ஆட்டமிழந்தனர். டேவன் கான்வே 47 ரன்களும், மார்க் சாப் மேன் 21 ரன்களும் சேர்த்து களத்தில் இருந்தனர்.

8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி 5 ஆட்டங்கள் கொண்ட டி20 தொடரை 31 என கைப்பற்றி கோப்பையை வென்றது.

# டெஸ்ட் அணியில் இருந்து நிதிஷ் குமார் ரெட்டி விடுவிப்பு




தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்கான இந்திய அணியில் ஆல் ரவுண்டரான நிதிஷ் குமார் ரெட்டி சேர்க்கப்பட்டிருந்தார். முதல் டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில் நாளை தொடங்க உள்ள நிலையில் இந்திய அணியில் இருந்து நிதிஷ் குமார் ரெட்டி விடுக்கப்பட்டுள்ளார்.

அவர், இந்தியா 'ஏ' அணியுடன் இணைந்துள்ளார். இந்தியா 'ஏ', தென் ஆப்பிரிக்கா 'ஏ' அணிக்கு எதிராக ஒருநாள் போட்டி தொடரில் விளையாட உள்ளது. இந்த தொடரின் முதல் போட்டி ராஜ்கோட்டில் இன்று நடைபெறுகிறது. இந்த ஆட்டத்தில் நிதிஷ் குமார் ரெட்டி களமிறங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் துருவ் ஜூரெல் களமிறக்கப்படுவார் என இந்திய அணியின் பேட்டிங் பயிற்சியாளரான டென் டஸ் ஷேட் தெரிவித்துள்ளார். ரிஷப் பந்த் அணிக்கு திரும்பி உள்ள நிலையில் துருவ் ஜூரெல் பேட்ஸ்மேனாக மட்டும் இடம்பெறுவார். இதனால் நிதிஷ் குமார் ரெட்டி வெளியே அமரவைக்கப்படுவார்.

இதன் காரணமாகவே அவரை, இந்தியா 'ஏ' அணியுடன் இணைந்து விளையாடுமாறு கூறப்பட்டுள்ளது. இது தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் போட்டி மற்றும் டி 20 போட்டிகளுக்கு தயாராக அவருக்கு உதவியாக இருக்கக்கூடும்.

# ஆஸி. பிட்ச்களில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சு 'செல்ஃப்' எடுக்காது: ஸ்டீவ் ஸ்மித்



தற்போது போடப்படும் ஆஸ்திரேலிய பிட்ச்கள் கணிக்க முடியாததாகி வருகிறது. மேலும், இங்கிலாந்து பவுலர்கள் ஸ்விங் செய்வதற்கு ஏற்ப அமையாது. இங்கு வேகமும் பவுன்ஸும் இருந்தால்தான் பிழைக்க முடியும் என்று ஆஸ்திரேலிய அணியின் ஆஷஸ் முதல் டெஸ்ட் கேப்டன் ஸ்டீவ் ஸ்மித் கூறியுள்ளார்.

பெர்த்தில் வரும் 21ம் தேதி முதல் டெஸ்ட் போட்டி நடைபெறுகிறது, ஆப்டஸ் ஸ்டேடியத்தின் பிட்ச் நிச்சயம் பவுலிங்கிற்கு, குறிப்பாக வேகப்பந்து வீச்சுக்கு அதிலும் குறிப்பாக ஆஸ்திரேலிய ரக கூகபரா 'சீம் அப்' பந்து வீச்சுக்குச் சாதகமாகவே இருக்கும் என்று ஸ்டீவ் ஸ்மித் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

காயத்தினால் சந்தேகமாயிருந்த ஜாஷ் ஹேசில்வுட் இப்போது முழு உடல் தகுதியுடன் களமிறங்குகிறார். இங்கிலாந்து ஏதாவது ஆஸ்திரேலிய பேட்டிங் வரிசையை ஆட்டிப்பார்க்க முடியுமெனில், அது ஜோஃப்ரா ஆர்ச்சர் மற்றும் மார்க் உட் ஆகியோரின் 145 150 கிமீ வேகப்பந்து வீச்சாகத்தான் இருக்க முடியும். அதுவும் மார்க் உட் சற்று முன் தான் காயமடைந்து ஸ்கேனுக்குச் சென்றதாகச் செய்திகள் எழுந்துள்ளன.

முதல் டெஸ்ட் பேஸ் மற்றும் பவுன்ஸ் அதிகமாக இருக்கும் பெர்த்தில் என்றால், அடுத்த டெஸ்ட் பிரிஸ்பன் என்னும் வேகப்பந்து வீச்சு ஆட்டக்களத்தில் பகலிரவு டெஸ்ட். எனவே இங்கிலாந்துக்கு ஓய்வே கிடையாது.

இந்நிலையில், விக்டோரியா அணியுடன் தோற்ற நியூஸவுத் வேல்ஸ் அணி வீரரும் ஆஸ்திரேலிய முதல் டெஸ்ட் கேப்டனுமான ஸ்டீவ் ஸ்மித், "இப்போது பிட்ச்கள் வித்தியாசமாக இருக்கின்றன. அதுவும் 'பைட்' இல்லாமல் மெதுவாக வீசும் இங்கிலாந்து பவுலர்களுக்குக் கடினம்.

இப்போது வேகமாக வீசக் கூடியவர்கள் இங்கிலாந்தில் இருக்கின்றனர். ஆனால், அவர்களும் ஃபிட் இல்லை அல்லது வயதாகிவிட்டது என்றே கூற வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு என்றால் இவர்கள் பந்து வீச்சு எடுபட்டிருக்கும். இப்போதைய பிட்ச்களில் எடுபடுவது கொஞ்சம் கடினம்.

மேலும், ஆஸ்திரேலிய அணியில் வேகப்பந்து வீச்சை திறம்படக் கையாளும் வீரர்கள் உள்ளனர். எனவே இது ஒரு நல்ல சவால். வேகத்துடன் பந்தை ஸ்விங்கும் செய்ய முயன்றால் நிச்சயம் பயனளிக்கும். ஆனால் இன்னொன்றையும் கூற வேண்டும். இத்தகைய வேகப்பந்து பிட்ச்களில் ஸ்லோயர் பவுலர்களை கையாள்வதும் சில வேளைகளில் கடினம். ஆகவே பொறுத்திருந்து பார்ப்போம்" என்றார் ஸ்டீவ் ஸ்மித்.



# மகிழ் திருமேனி இயக்கத்தில் விஜய் சேதுபதி

மகிழ் திருமேனி இயக்கவுள்ள அடுத்த படத்தில் விஜய் சேதுபதி நடிக்க பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

அஜித் நடிப்பில் வெளியான 'விடாமுயற்சி' படத்தினை கடைசியாக இயக்கியிருந்தார் மகிழ் திருமேனி. அப்படம் போதிய வரவேற்பினைப் பெறவில்லை. இதனைத் தொடர்ந்து தனது அடுத்த படத்துக்கான பணிகளை கவனித்து வந்தார். தற்போது அதனை மிராக்கிள் மூவிஸ் என்ற மும்பை நிறுவனம் தயாரிக்க முன்வந்திருப்பதாக தெரிகிறது.

இதில் நாயகனாக விஜய் சேதுபதி, நாயகியாக ஷ்ரத்தா கபூர், வில்லனாக சஞ்சய் தத் ஆகியோர் நடிக்க பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. இன்னும் அதிகாரபூர்வமாக கையெழுத்தாகவில்லை. இப்படத்தினை தமிழ் மற்றும் இந்தி என இருமொழிகளிலும் உருவாக்க திட்டமிட்டு இருக்கிறார் மகிழ் திருமேனி. இறுதிகட்டப் பேச்சுவார்த்தைக்கு பின்பு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என தெரிகிறது.

'தடையறத் தாக்க', 'மீகாமன்', 'தடம்' உள்ளிட்ட பல்வேறு த்ரில்லர் படங்களை இயக்கி வெற்றிக் கண்டவர் மகிழ் திருமேனி. 'விடாமுயற்சி' தோல்விக்கு பிறகு, மீண்டும் தனது பாணியில் ஒரு த்ரில்லர் படத்தை இயக்க முடிவு செய்திருக்கிறார். அடுத்த ஆண்டு இப்படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீண்டும் சிவகார்த்திகேயன் படத்தில் நாயகியாக ஸ்ரீலீலா

சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ள அடுத்த படத்தின் நாயகியாகவும் ஸ்ரீலீலா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். சிவகார்த்திகேயன் ஸ்ரீ ஸ்ரீலீலா இணைந்து 'பராசக்தி' படத்தில் நடித்து முடித்துள்ளனர். இதன் இறுதிகட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. ஜனவரி 14ம் தேதி இப்படம் வெளியாகவுள்ளது. டான் பிக்சர்ஸ் தயாரித்து வரும் இப்படத்தில் ரவி மோகன், அதர்வா, பாசில் ஜோசப் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

'பராசக்தி' படத்தை முடித்துவிட்டு, சிபி சக்கரவர்த்தி இயக்கவுள்ள படத்தில் நடிக்கவுள்ளார் சிவகார்த்திகேயன். இதன் படப்பிடிப்பு டிசம்பரில் தொடங்க படக்குழு ஆயத்தமாகி வருகிறது. இதிலும் நாயகியாக நடிக்க ஸ்ரீலீலா ஒப்பந்தமாகி இருக்கிறார். இதற்கு இசையமைப்பாளராக சாய் அபயங்கர் பணிபுரியவுள்ளார்.

பேஷன் ஸ்டுடியோஸ் நிறுவனம் பெரும் பொருட்செலவில் இதனை தயாரிக்கவுள்ளது. 'டான்' படத்துக்குப் பிறகு சிவகார்த்திகேயன் சிபி சக்கரவர்த்தி மீண்டும் இதில் இணைந்து பணிபுரியவுள்ளனர். இதன் படப்பூஜை சமயத்தில் இப்படத்தில் வேறு யாரெல்லாம் நடிக்கவுள்ளார்கள் என்பதை தெரிவிக்க திட்டமிட்டு இருக்கிறது படக்குழு.





# 'ரிவால்வர் ரீட்டா' ட்ரெய்லர் எப்படி? கீர்த்தி சுரேஷின் ஆக்‌ஷனும் டார்க் காமெடியும்!

கீர்த்தி சுரேஷ் நடித்துள்ள 'ரிவால்வர் ரீட்டா' படத்தின் ட்ரெய்லர் வெளியாகியுள்ளது.

ஜே.கே சந்துரு இயக்கத்தில் கீர்த்தி சுரேஷ், ராதிகா சரத்குமார், ரெடின் கிங்ஸ்லி, மைம் கோபி, சூப்பர் சுப்பராயன், அஜய் கோஷ், ஜான் விஜய் உள்ளிட்ட பலர் நடித்துள்ள படம் 'ரிவால்வர் ரீட்டா'. இதற்கு ஒளிப்பதிவாளராக தினேஷ் கிருஷ்ணன், இசையமைப்பாளராக ஷான் ரோல்டன் பணிபுரிந்துள்ளார். முழுக்க காமெடி த்ரில்லர் பாணியில் இப்படத்தினை உருவாக்கி இருக்கிறார்கள். இப்படம் வரும் நவ. 28 திரையரங்குகளில் வெளியாகிறது.

ட்ரெய்லர் எப்படி? நெல்சனின் முதல் படமான 'கோலமாவு கோகில'வை ட்ரெய்லர் நினைவுப்படுத்துகிறது. ஒரு குடும்பம், அதற்கு வரும் பிரச்சினையை குடும்ப பெண்கள் முன்னின்று தீர்த்து வைப்பது. முழுக்க முழுக்க டார்க் காமெடியுடன் கூடிய த்ரில்லர் கதையாக உருவாக்கியுள்ளனர். ட்ரெய்லரிலேயே பல இடங்களில் காமெடி ஒர்க் ஆகியிருக்கிறது. ஷான் ரோல்டனின் இசை இதில் வேறு பாணியில் புதிய பரிணாமத்தை எட்டியிருக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.



# கல்லல் முருகப்பா பள்ளியில் குழந்தைகள் தினக் கொண்டாட்டம்




சிவகங்கை, நவ.17-

சிவகங்கை மாவட்டம் கல்லலில் உள்ள கல்லல் முருகப்பா மேல்நிலை ப்பள்ளியில் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு தலைமையேற்று உரை நிகழ்த்திய தலைமை ஆசிரியர் அழகப்பன் இந்தியா மீதான நேருவின் தொலை நோக்குப் பார்வையைக் குறிப்பிட்டுப் பேசினார். ஆசிரியை கல்யாணி கல்விக்கு நேரு கொடுத்த முக்கியத்துவத்தை விளக்கினார். ஆசிரியை பத்மா நேருவின் தியாக உயர்வைக் குறிப்பிட்டார். ஆசிரியர் சந்தானகிருஷ்ணன் குழந்தைகள் மீதான நேருவின் ஈர்ப்பினைப் பற்றி பேசினார். ஆசிரியர் அணணாத்துரை பாடல் பாடினார். ஆசிரியர் பாக்கியசெல்வி நேருவின் அறிவாற்றல் அளப்பரியது எனக் குறிப்பிட்டார். மாரிமுத்து கற்பகவல்லி விஜயராணி அமுதா நேரு குறித்தும், குழந்தைகள் தின சிறப்பு குறித்தும் பேசினர்.

சுமார் 300 மாணவ மாணவிகள் இதில் கலந்து கொண்டனர். நேரு குறித்த ஆசிரியர்களின் கேள்விகளுக்கு சரியாக பதிலளித்த மாணவ மாண விகளுக்கு பரிசாக துளிர் புத்தகம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த ஆசிரியர் பிரபு இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேருவின் பங்கு குறித்தும், பிரதமராக அவர் மிகச் சிறப்பாக பரிணமித்தது குறித்தும் உரையாற்றினார்.

# உலக கருணை தின விழா கொண்டாட்டம்







சிவகங்கை, நவ.17-

கல்லல் சாந்திராணி முதியோர் இல்லத்தில் புனித வின்செண்ட் தே பவுல் சபை சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் புனித அருளானந்தர் கிளைச் சபையின் சார்பாக உலக கருணை தினம் கொண்டாடப்பட்டது. காளையார்கோவில் உதவிப் பங்குத்தந்தை நிக்கோலாஸ் தலைமை வகித்து ஆசியுரை வழங்கினார். முதன்மை பணியாளர் ஆரோக்கியசாமி உலக கருணை தினத்தில் புனித அன்னை தெரசாவின் கருணை உள்ளம் உலகளாவிய மக்களுக்கு பணி வாழ்வின் மேன்மைக்கு பாதை அமைத்தது என்றும் இவ்வில்லத்தின் அருட்சகோதரிகள் தாயுள் ளத்துடன் முதியோர்களை கருணையுடன் அன்பு செலுத்துகிறார்கள். இவர்களின் பணிவாழ்வு சிறக்க புனித அருளானந்தர் கிளைச் சபையின் சார்பாக நன்றியை தெரி வித்துக் கொண்டார். நிர்வாகி அருட்சகோதரி ரெக்ஸி வரவேற்று நன்றி கூறினார். சொசைட்டி சார்பாக மளிகைப் பொரு ட்களும் புத்தாடைகளும் முதியோர்களுக்கான ஊன்றுகோல்களும் வழங்கி மகிழ்ந்தோம். துணைத்தலைவர் ஆரோக்கிய லூயிஸ் லெவே செயலாளர் ஜோசப் பொருளாளர் பால்ஜோசப் திட்ட அலுவலர் செல்வம் உறுப் பினர் அலெக்ஸாண்டர் மற்றும் அருட்சகோ தரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# மானாமதுரையில் நகராட்சி கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மீது கவுன்சிலர்கள் புகார்

மானாமதுரை, நவ.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் நகராட்சி கூட்டம் தலைவர் மாரியப்பன் கென்னடி தலைமையில் நேற்று நடைபெற்றது துணைத் தலைவர் முன்னிலை பாலசுந்தரம் வகித்தார். நகராட்சி ஆணையாளர் கோபாலகிருஷ்ணன், நகராட்சி பொறியாளர் பட்டு ராஜன் வரவேற்றனர்.

கூட்டம் துவங்கியவுடன் தி.மு.க., கவுன்சிலர்கள் சோம சதீஷ்குமார், காளீஸ்வரி உள்ளிட்ட கவுன்சிலர்கள் பேசுகையில்

மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் தூய்மை பணிகள் மோச மான நிலையில் நடைபெறுவதால் கழிவுநீர் தேங்கி, குப்பை குவிந்து கிடப்ப தாகவும், நகராட்சி கூட்டத்தில் கவுன்சிலர்கள் குறை சொல்லக்கூடாது என்பதற் காக கூட்டம் நடைபெறும் நாட்களின் போது மட்டுமே கொசு மருந்து அடிக்கப்படுவதாக தெரி வித்தனர்.

இதுகுறித்து நகராட்சி கமிஷனர் கோபாலகிருஷ் ணன் பதில் அளிக்கும் போது நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேங்கும் குப் பையை அகற்ற சேதம டைந்த டிராக்டர்களுக்கு பதிலாக புதிதாக டிராக்டர் கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துப்புரவு ஆய்வாளர் மற் றும் மேஸ்திரிகள் தினம் தோறும் அனைத்து பகுதிகளுக்கும் சென்று துப்புரவு பணிகளை ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்

7வது வார்டு மாரிக்கண்ணன் கவுன்சிலர் பேசுகையில் நகராட்சிக்குட் பட்ட பகுதிகளில் தற் போது போடப்பட்ட தார் ரோடுகளில் பெரும்பா லான ரோடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. வீட்டு வரி ரசீது போடுவதில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக ஆவேசமாக கூறினார்

அ.தி.மு.க கவுன்சிலர் இந்திரா பேசுகையில் பழைய தபால் ஆபீஸ் தெருவில் நள்ளிரவில் குடிநீர் வினியோகம் செய்வதால் மக்கள் அவதிப்பட்டு வருவதாக தெரி வித்தார்

நகராட்சி தலைவர் மாரியப்பன் கென்னடி பேசுகையில் குடிநீர்திட்ட பணி கள் நடைபெற்று வருகிறது. இனிமேல் முறையாக உரிய நேரத்தில் குடிநீர் வினியோ கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்

அ.தி. மு.க., கவுன்சிலர் தெய்வேந்திரன் பேசுகையில் மானாமதுரை வைகை ஆற்றில் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு செயல்பட்ட முன்னோர்களுக்கு திதி கொடுக் கும் இடத்தை மீண்டும் சீரமைத்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் நகராட்சிக்கு கோரிக்கை விடுத்தார்.

# அதிமுகவுடன் தவெக கூட்டணி வைக்க 1% கூட வாய்ப்பு இல்லை: சிடிஆர் நிர்மல்குமார்

சென்னை, நவ.17-

"எங்கள் கொள்கை எதிரியான பாஜகவுடனும், அந்த கட்சியுடன் கூட்டணியில் உள்ள எந்த கட்சியோடும் கூட்டணி வைக்க 1% கூட வாய்ப்பு இல்லை." என அதிமுகவுடன் கூட்டணி குறித்த கேள்விக்கு தவெக இணைப் பொதுச் செயலாளர் சிடிஆர் நிர்மல்குமார் பதிலளித்தார்.




மதுரையில் செய்தியாளர்களிடம் நிர்மல் குமார் பேசுகையில், "எஸ்ஐஆரால் தமிழகத்தில் கோடிக்கணக்கான மக்கள் வாக்குரிமையை இழக்கும் அபாயம் உள்ளது. இதனால்தான் இன்று வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிராக இன்று தவெக சார்பில் தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்தினோம். இதுபற்றி தமிழகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தவே தவெக இன்று போராட்டம் நடத்தியது. இவ்வளவு அவசரமாக எஸ்ஐஆர் பணிகளை நடத்தினால், பல லட்சம் பேரின் வாக்குரிமை பறிபோகும். இந்த பணிகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்தி கொடுமைப் படுத்துகிறார்கள்" என்று தெரிவித்தார்.

ராகுல் காந்தி கூட்டணி குறித்து விஜய்யுடன் பேசினாரா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "எங்கள் தலைவர் விஜய் யாருடனும் கூட்டணி குறித்து பேசவில்லை. அதுபற்றிய வதந்திகளை நம்ப வேண்டாம்" என்றார்.

அதிமுகவுடன் கூட்டணி குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "எங்களின் கொள்கை எதிரி யார், அரசியல் எதிரி யார் என்று சொல்லிவிட்டோம். ஆட்சியில் இல்லாதவர்களை பற்றி நாங்கள் பேசமாட்டோம். அதிமுக இன்று ஆட்சியில் இல்லாத கட்சி. எனவே அவர்களைப் பற்றி பேசி மக்களை குழப்ப விரும்பவில்லை.

இன்று ஆட்சியில் உள்ள திமுகதான் எங்கள் பிரதான அரசியல் எதிரி. கொள்கை எதிரியாக பாஜக உள்ளது. கொள்கை எதிரியான பாஜகவுடனும், அந்த கட்சியுடன் கூட்டணியில் உள்ள எந்த கட்சியோடும் கூட்டணி வைக்க 1 சதவீதம் கூட வாய்ப்பு இல்லை. எங்கள் தலைவர் விஜய்தான் முதல்வர் வேட்பாளர். அவர் தலைமையை ஏற்று கூட்டணிக்கு வருபவர்களை நாங்கள் வரவேற்போம்" என்றார்





# மதுரையில் பள்ளி மாணவர்களுக்கு போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏராளமான மாணாக்கர்கள் பங்கேற்பு

மதுரை, நவ.17-

மதுரை மாவட்டம் விரகனூர் கோழிமேடு பகுதியில் உள்ள கே.எல்.என் பள்ளியில் பிரிஸ்ட் சட்டபள்ளி சார்பில் அதன் கல்வி தலைவர் டாக்டர் எம்.ஜாஜி தலைமையில் பள்ளி மாணவர்களுக்கான போக்சோ சட்டம், மனித உரிமை, குழந்தைகள் உரிமை, சிறார்களுக்கான சட்டம், சைபர் குற்றம், பாகுபாடு எதிர்ப்பு, சுற்றுச்சூழல் சட்டம், தொழில் தொலை நோக்கு நிலை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பள்ளி மாணக்கர்கள் 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வழக்கறிஞர் உம்மு அபிஸா கலந்துகொண்டு மாணக்கர்களுக்கான போக்சோ சட்டம், சிறார் சட்டம் ஆகிய பல்வேறு சட்டங்களை குறித்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினார்.

மேலும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு, சிறார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் போக்சோ சட்டத்தால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் எடுத்துரைத்து பேசினார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பள்ளி முதல்வர் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



# அரையாண்டுத் தேர்வு டிச.10ல் தொடக்கம்: தமிழக பள்ளிக்கல்வித் துறை அறிவிப்பு

சென்னை, நவ.17-

பள்ளி மாணவர்களுக்கான அரையாண்டுத் தேர்வுகள் டிசம்பர் 10ம் தேதி முதல் தொடங்கும் என்று பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை இயக்குநரகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு விவரம்; தமிழகத்தில் பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தைப் பின்பற்றும் அனைத்து விதமான பள்ளிகளிலும் 1 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான அரையாண்டுத் தேர்வு டிசம்பர் 10 முதல் 23ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது.

இதில் 10, 11, 12ம் வகுப்புகளுக்கு டிச. 10ம் தேதியும், 6 முதல் 9ம் வகுப்புகளுக்கு டிச.15ம் தேதியும் தேர்வுகள் தொடங்கும். இதற்குரிய பாடவாரியான கால அட்டவணை பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கான தேர்வு டிசம்பர் 15ல் தொடங்கி 23ம் தேதி வரை முடிவடையும். தேர்வுகள் காலை, மதியம் என வேளைகளில் நடத்தப்பட உள்ளது. தொடர்ந்து அனைத்து வகுப்புகளுக்கும் டிசம்பர் 24 முதல் ஜனவரி 1ம் தேதி வரை அரையாண்டு விடுமுறை வழங்கப்படும். இந்த விடுப்பு முடிந்து பள்ளிகள் மீண்டும் ஜனவரி 2ல் பள்ளிகள் திறக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தலைமை தேர்தல் அதிகாரி தகவல் 5.90 கோடி கணக்கீட்டு படிவம் விநியோகம்

சென்னை, நவ.17-

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் சிறப்பு தீவிர திருத்தத்தின் ஒரு பகுதியாக, 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் கணக்கீட்டு படிவங்கள் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. மாநிலத்தில் உள்ள வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக மொத்தத்தில் 6,41,14,582 கணக்கீட்டு படிவங்கள் அச்சிடப்பட்டது. நேற்று வரை 5,90,13,184 கணக்கீட்டு படிவங்கள், அதாவது 92.04% படிவங்கள் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. வாக்காளர்கள் கணக்கீட்டு படிவங்களில் தேவையான தொடர்புடைய விவரங்களை நிரப்ப வேண்டும். மேலும் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் கணக்கீட்டு படிவங்களை சேகரிக்க வீடு தோறும் வருகை தரும்போது வாக்காளர்கள் தங்களது நிரப்பப்பட்ட படிவங்களை சம்பந்தப்பட்ட வாக்குச் சாவடி நிலை அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

# கல்லலில் அறிவியல் இயக்கம் சார்பாக குழந்தைகள் தின விழா

சிவகங்கை, நவ.17-

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கல்லல் கிளை சார்பாக கல்லலில் குழந் தைகள் தினம் கொண்டாடப்பட்டது. சர் சி வி ராமன் துளிர் இல்லப் பொறுப்பாளர் நாகரத்தினம் வரவேற்புரையாற்றினார். விழாற்கு தலைமை தாங்கிய தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சிவகங்கை மாவட்ட பொருளாளர் பிரபு ஜவஹ ர்லால் நேருவின் நாட்டுப்பற் றினையும், பிரதமராக இருந்து தொடக்கக் கல்விக்கு அவர் கொடுத்த முக்கியத்துவத்தைப் பற்றியும் விளக்கினார். அறிவியல் மனப்பான் மையுடன் இருந்த நேரு இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், அறிவியல் ஆராய்ச்சி மையங்கள் போன்றவை உருவாக காரணமாக இருந்ததையும் எடுத்துக் கூறினார். நேருவின் சிறைக் கடிதங்கள் அவரின் மகளான இந்திராவை எவ்வாறு பிற்காலத்தில் இரும்பு பெண்மணியாக மாற்றியது என்பதைக் கூறிய துடன், ரோஜா மலருக்கு இணையாக குழந்தைகளை அவர் நேசித்ததையும் எடுத்துக் கூறினார். மாணவிகள் லக்ஷிகா சரண்யா சௌமியா கலைநிகழ்ச்சிகளில் பங்கு பெற்றனர். விவேகானந்தன் சிறந்த மாணவருக்கான பரிசினைப் பெற்றார். டாக்டர் முத்துலட்சுமி துளிர் இல்லப் பொறுப்பாளர் சித்திரைச் செல்வி நன்றி கூறினார். திரளான மாணவ மாணவிகள், அறிவியல் உறுப்பினர் விஜயலட்சுமி இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.





■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கீழநெட்டூர் ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழா நடைபெற்றது. மாணவர்களின் திறனை மேம்படுத்த ஓவியப் போட்டி கட்டுரை போட்டி பேச்சு போட்டி பாட்டுப் போட்டி நடனம் போன்றவை மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மல்லிகா த.ஆ(.போ) ம.புகழேந்திஅறிவியல் ஆசிரியர் தி.சரோஜா.கணித ஆசிரியர் வீ.நாகராஜன் இடைநிலை ஆசிரியர் சு.இராஜேஸ்வரிஇடைநிலை ஆசிரியர் மற்றும் பெற்றோர்கள் உட்பட பலர் பங்கேற்று சிறப்பித்தனர்அனைவருக்கும் லட்டும் சாக்லேட்டும் வழங்கப்பட்டது




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் முன்னாள் பாரத பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 136 வது பிறந்தநாளை முன்னிட்டு குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் மற்றும் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளும் பள்ளியின் நிறுவனர் இராஜேஸ்வரி அம்மா வழங்கப்பட்டது. பள்ளியின் தாளாளர் R. கபிலன் தலைமை தாங்கினார். பள்ளியின் சார்பில் குழந்தைகள் மூலமாக 65 வயதிற்கு மேல் உள்ள வயதானவர்களுக்கு புத்தாடை, போர்வை மற்றும் அரிசி, பருப்பு காய்கறி வகைகள் முதலியவை நிர்வாகி மீனாட்சி முன்னிலையில் வழங்கப்பட்டது. பள்ளியின் முதல்வர் .M.சாரதா குழந்தைகளுக்கு கேக் வெட்டி இனிப்புகள் வழங்கினார். இவ்விழாவின் ஏற்பாடுகளை பள்ளியின் ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து செய்திருந்தார்கள். குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள். மிகப் பிரமாண்டமான முறையில் குழந்தைகள் தின விழா சிறப்பாக பாபா மெட்ரிக் பள்ளியில் நடைபெற்றது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161